மின்னணு செய்தி மடல்
இதழ்: 10
ஜனவரி & பிப்ரவரி 2021

# புதிய தலைமுறை அறக்கட்டளை

[இளைஞர் திறன் மேம்பாடு மற்றும் கிராமப்புறக் கல்விக்காக பணியாற்றும் ஓர் அரசு சாரா தொண்டு நிறுவனம்]

"ஊக்கமது கைவிடேல்"

**தொழில் முனைவோராக உருவாகலாம்**
சுயதொழில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சிகள்
ISRB Expo™
Indian Small & Rural Business Exposition

**கிராமப்புற மற்றும் அரசுப் பள்ளி மாணவர்கள் கல்வி முன்னேற்றம்**
புதிய தலைமுறை அறக்கட்டளை
விழுதுகள் உயர்கல்வித் திட்டம்

**கிராமப்புற மருத்துவ முகாம்கள்**
வள்ளியம்மை அம்மாள் கிராமப்புற மருத்துவ உதவித் திட்டம்
"வள்ளி"
உங்களுடைய சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் குறித்த சமுதாய மருத்துவ செய்தி மடல்

**அச்சத்தை அகத்தில் வைப்போம்**
**பொறுப்பை உணர்ந்தவராய் !**

முனைவர். பி. சத்தியநாராயணன்
நிறுவனர் & அறங்காவலர்
புதிய தலைமுறை அறக்கட்டளை

**கிராமப்புற மாணவர்களின் முன்னேற்றம்**
இலவச கிராமப்புறக் கல்வி மையங்கள்

**பெண்கள் முன்னேற்றம்**
வள்ளியம்மை அம்மாள் தையற் பள்ளி

**சாலை பாதுகாப்பு நிகழ்ச்சிகள்**
கருத்தரங்கம் & விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

# முயற்சி ! முன்னேற்றம் ! மகிழ்ச்சி ! மால்வாய்

## "வளரிளம் பெண்களுக்கான வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு பயிற்சி"





விழாவில் பங்கேற்ற சிறப்பு விருந்தினர்கள் மற்றும் இளம் பெண்கள்

திருச்சி, கல்லக்குடி அருகே மால்வாய் கிராமத்தில் அமைந்துள்ளது பச்சையம்மன் கோவில். அக்கோயிலில் பூசாரியாக இருந்து வரும் கருப்பையா மற்றும் கிராம தன்னார்வலர் பாலகிருஷ்ணன் அவர்களின் உதவியுடன் அக்கிராமத்தில் உள்ள வளரிளம் பெண்களுக்கான வாழ்க்கைத்திறன் மேம்பாட்டு பயிற்சி நவம்பர் 21, 2020 மற்றும் டிசம்பர் 20, 2020 ஆகிய இரண்டு நாட்களில் மால்வாய் கிராமத்தின் ஊராட்சி அலுவலகத்தில் நடத்தப்பட்டது. புதிய தலைமுறை அறக்கட்டளை மற்றும் பெரம்பலூரில் உள்ள ஐடியல் டிரஸ்ட் சார்பில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்நிகழ்ச்சிகளில் நவம்பர் 21, 2020 (21 வளரிளம் பெண்கள்) & டிசம்பர் 20, 2020 (17 வளரிளம் பெண்கள்) உட்பட மொத்தம் 38 வளரிளம் பெண்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கு மால்வாய் கிராம ஊராட்சி தலைவர் திருமதி. திவ்யா, தலைமை தாங்கினார். துணைத்தலைவர் திரு. மணிவேல் முன்னிலை வகித்தார். கிராம தன்னார்வலர் திரு. தர்மதுரை அவர்கள் வரவேற்புரை வழங்கினார். இதனைத் தொடர்ந்து ஐடியல் அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலர் செ.ராஜவேல் அவர்கள் பேசுகையில் ஐடியல் டிரஸ்ட், கிராமப்புற மற்றும் இளைஞர் மேம்பாடு சேவையில் இணைவதில் பெருமை கொள்கிறது என்று கூறினார். வாழ்க்கைத்திறன் பயிற்றுநர் திருமதி. செ. விமலா அவர்கள், உலக சுகாதார நிறுவனம் வகுத்துள்ள பின்வரும் 10 வகையான வாழ்க்கைத்திறன்கள் (முடிவெடுக்கும் திறன், பிரச்சனைகளை தீர்க்கும்திறன், படைப்பாற்றல், நெருக்கடியான சூழலை எதிர்கொள்ளுதல், தகவல் தொடர்புதிறன், தனிமனித உறவு மேம்பாட்டுத்திறன், சுய விழிப்புணர்வு, பிறர் உணர்வுகளை புரிந்துகொள்ளுதல், உணர்வுகளை கையாளும் திறன் மற்றும் மன அழுத்தத்தை கையாளும் திறன்) குறித்து பயிற்சி வகுப்புகளை நடத்தினார்.

வளரிளம் பெண்கள் பயிற்சியில் சிறப்பாக பங்கேற்கும் வகையில், குழு விளையாட்டு கலந்தாய்வு, மூளை செயல்திறன், சுயமதிப்பீடு, போன்ற செயல்பாடுகள் மூலம் பயிற்சி நடத்தப்பட்டது. மேலும் பயிற்சியில் மாதவிடாய் காலங்களில் பெண்கள் கடைபிடிக்கவேண்டிய உடல் மற்றும் மனநல பராமரிப்பு குறித்தும் விளக்கப்பட்டது. நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள் இந்த பயிற்சியானது தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது எனவும், இதுபோன்ற வாழ்க்கைத்திறன் குறித்த பயிற்சியில் பங்கேற்பது இதுவே முதல்முறை என்றும் தெரிவித்தார்கள். இனிவரும் காலங்களில் இதுபோன்ற பயனுள்ள பல பயிற்சிகளை நடத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

## கணிப்பொறி துறையில் வேலை வாய்ப்புகள் இணைய வழி ஆன்லைன் கருத்தரங்கம்



முனைவர். பி. அமுதா



திருமதி. மைதிலி பிரகாஷ்

கொரோனா நோய்தொற்று நெருக்கடி காலத்தில் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் வேறுவிதமாக மாறியுள்ளது. பொது நிகழ்ச்சிகளில் குறைந்த அளவு மனிதர்களே கலந்து கொள்கின்றனர். இதனால் தனியார் நிறுவனங்கள் இயங்கும் முறை முற்றிலும் மாறி விட்டது. விழுதுகள் மாணவர்களுக்காக பொறியியல் துறையில் வேலை வாய்ப்புகள் என்ற தலைப்பில் அக்டோபர் 27, 2020 அன்று நடைபெற்ற இணையவழி ஆன்லைன் கருத்தரங்கில் முனைவர். பி. அமுதா, துறைத்தலைவர், கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை மற்றும் திருமதி. மைதிலி பிரகாஷ், மூத்த பயிற்சியாளர், CSI, & முன்னாள் பேராசிரியர், எஸ்.எஸ். ஜெயின் கல்லூரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர். கம்ப்யூட்டர் துறையில் வேலை வாய்ப்புகள் குறித்து அறக்கட்டளையின் விழுதுகள் திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்காக 2 மணி நேர ஆன்லைன் வகுப்பு நவம்பர் 30, 2020 அன்று "Job Opportunities in IT Sector During Pandemic Period" என்ற தலைப்பில் மாலை 5.00 மணியளவில் நடைபெற்றது.



முனைவர். முருகானந்தம்

புதிய தலைமுறை அறக்கட்டளையின் தலைமை திட்ட மேலாளர் சுரேஷ் கண்ணன் அவர்கள் தொடக்க உரை ஆற்றினார். அதனைத்தொடர்ந்து SRM பல்கலைகழகத்தின் உதவி பேராசிரியர் முருகானந்தம் பாலகிருஷ்ணன் அவர்கள் பேசுகையில் இன்றைய தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வேலை வாய்ப்புகள், கணினி அறிவியல் துறை இப்போது வேகமாக வளர்ந்து வரும் ஒரு துறை என்றும், திறமையான கணினி அறிவியல் பொறியாளர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச அளவில் வேலை வாய்ப்புகள் அதிகளவில் உள்ளது என்றும் கூறினார். ISRO (இந்திய விண்வெளி ஆராய்ச்சி துறை) DRDO (இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு) துறைகளில் அதிகளவு வேலை வாய்ப்புகள் உள்ளன. Google, Microsoft, Amazon போன்ற பிரபல நிறுவனங்கள் கணிப்பொறிதுறையில் பட்டப்படிப்பை முடித்தவர்களுக்கு நிறைய வேலை மற்றும் வருமான வாய்ப்புகளையும் வழங்கி வருகிறது. ஆகையால் மாணவர்களாகிய நீங்கள் கணிப்பொறி துறை குறித்து உங்களுடைய திறமைகளை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பன போன்ற பல்வேறு பயனுள்ள தகவல்களை பகிர்ந்து கொண்டார்.

### Top IT Skills & Tech Skills

- Python. ...
- Data Science. ...
- Cybersecurity. ...
- Cloud Computing
- Blockchain. ...
- Virtual Reality.

### நேர்காணல் நடத்துவோர் எதிர்பார்க்கும் அடிப்படைப் பண்புகள்

- திறன்களை வளர்த்துக் கொள்ளுதல்
- பெரியோர்களை மதித்தல்
- நல்ல உடை அணிதல்
- அணுகுமுறையில் / பேசுவதில் கனிவு
- உடல் மற்றும் சுற்றுப்புற சுத்தத்தைப் பேணுதல்

### மாணவர்களின் கருத்துகள்



மாலதி



எஸ். தினேஷ்

இக்கருத்தரங்குகளில் கலந்து கொண்ட தேனி மாவட்டம், சின்னஓளபுரம் கிராமத்தைச்சேர்ந்த பி.எஸ்சி., ரசாயனம், முதலாமாண்டு மாணவர் எஸ். தினேஷ் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த முதலாமாண்டு பி.காம் மாணவி மாலதி ஆகியோர் இக்கருத்தரங்கில் வேலை வாய்ப்புகள் குறித்து பல்வேறு பயனுள்ள தகவல்களை சிறப்பு அழைப்பாளர்கள் வழங்கினார்கள். நாங்கள் எங்கள் பட்டப்படிப்பை முடித்தவுடன் கண்டிப்பாக கணிப்பொறி துறையில் வேலைக்கு செல்வோம், அதற்குரிய தகுதிகளை வளர்த்துக்கொள்வோம் என்று கூறினார்கள்.

## மருது சகோதரர்கள் - ஒரு வீர வரலாறு



**"இந்தியாவில் முதலில் சுதந்திர போராட்டத்தை துவக்கிய மருது சகோதரர்களை, அடக்க இயலாமல் வெள்ளைகாரர்கள் இங்கிலாந்திலிருந்து படைபலத்தை பெருக்கினார்கள் என்று ஒரு வரலாற்று செய்தி நிலவுகிறது."**


சிவகங்கை சீமையில் காளையார் கோயிலை தலைநகரமாக கொண்டு ஆண்டு வந்த மருது சகோதரர்கள் என்று அழைக்கப்படும் சின்ன மருது, பெரிய மருது சிறப்பான ஆட்சியை மக்களுக்கு தந்து வந்தனர். (ஆட்சிக் காலம் 1785 - 1801) பாஞ்சாலக்குறிச்சியை ஆண்டுவந்த கட்டபொம்மன் இவர்களோடு நல்ல நட்புடன் இருந்தார். மருது சகோதரர்கள், சிவகங்கையை கைப்பற்றிக் கொண்ட ஆற்காட்டு நவாபிடமிருந்து மீண்டும் சிவகங்கையை கைப்பற்றி ஆண்டனர். இவர்கள் திறம் மிக்க படையை வைத்திருந்தனர்.

வேலு நாச்சியாருக்கு அடைக்கலம் கொடுத்து காத்தனர். கட்டபொம்மனின் சகோதரர் ஊமைத்துரைக்கு அடைக்கலம் கொடுத்து ஆதரித்தனர். அறிஞர் பெருமக்களை ஆதரித்தனர். பல ஆலயங்களுக்கு திருப்பணிகள் செய்தனர். இவர்கள் செய்த ஆலய திருப்பணிகள் கல்வெட்டுகளில் இன்றும் உள்ளன.

ஆங்கிலேய படையெடுப்பை தடுத்து நிறுத்தி நாட்டில் அமைதியை ஏற்படுத்தினர். இருப்பினும் வளர்ந்து வந்த ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை இவர்களால் தடுத்து நிறுத்த இயலவில்லை. எனவே மறைந்து தாக்கும் அதிரடி போர் முறையை மேற்கொண்டு ஆங்கிலேய படைகளை எதிர்த்தனர். இப்போரின் முடிவில் மருது சகோதரர்கள் சிறை பிடிக்கப்பட்டு 1801 ஆண்டு அக்டோபர் 24 ஆம் தேதி திருப்பத்தூர் கோட்டையில் தூக்கிலிடப்பட்டனர்.

தமிழக அரசு இவர்களுக்கு ஆண்டுதோறும் நினைவு நாள் அன்று குருபூஜை நடத்தி வருகிறது. இவர்கள் வரலாறு 1959 ஆம் ஆண்டு திரைப்படமாக வெளிவந்தது. மத்திய அரசு இவர்களுக்கு தபால் தலை வெளியிட்டு கௌரவப்படுத்தியது. திருப்பத்தூரில் இவர்கள் தூக்கிலிடப்பட்ட இடத்தில் இவர்களது சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. இவர்களின் வீர வரலாறு இளைஞர்களுக்கு சிறந்த தேசபக்தியை ஊட்டுவதாக விளங்குகிறது.

## இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் - அபுல் கலாம் ஆசாத்



இந்திய நாட்டு விடுதலைக்காக பாடுபட்ட முக்கிய தலைவர்களுள் மௌலானா அபுல் கலாம் ஆசாத் அவர்களும் ஒருவர் ஆவார். இவர் 1880 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 11 ஆம் நாள் சௌதி அரேபியா மக்கா நகரில் பிறந்தார். 1890 இல் இந்தியாவுக்கு குடிபெயர்ந்து கொல்கத்தாவில் பள்ளிப்படிப்பை முடித்தார். இவரது பெற்றோர்கள் இவருக்கு பல நல்லாசிரியர்களை நியமித்து தரமான கல்வியை அளித்தனர். அதன் பயனாக சமயம், தத்துவம், கணிதம், வரலாறு, விஞ்ஞானம் ஆகிய துறைகளில் தேர்ச்சி பெற்றார். தனது இலக்கிய பத்திரிகையில் பல கட்டுரைகளை வெளியிட்டார். விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்ற முதுமொழிக்கு ஏற்ப இளமையிலேயே அனைவரும் வியக்கும் வண்ணம் பல திறமைகளை வெளிப்படுத்தினார். பல மொழிகளில் தேர்ச்சிபெற்றார்.

**"ஜாதி, மத, இனப் பாகுபாடின்றி அனைவரும் தரமான கல்வி பெற வேண்டும். 14 வயது வரை அனைத்துக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்."**

1905ஆம் ஆண்டு வங்கப்பிரிவினையின் போது முழு நேர அரசியலில் ஈடுபட்டார். ஆங்கிலேய அரசின் அடக்கு முறை ஆட்சியை கண்டித்து பல சொற்பொழிவுகளை ஆற்றினார். இதனால் காந்தி நேரு, படேல் போன்ற தேசியத் தலைவர்களுடன் நெருங்கி பழகும் வாய்ப்பு கிடைத்தது. பல பத்திரிகைகளை நடத்தினார். இவருடைய பத்திரிகைகளை ஆங்கிலேய அரசு தடை செய்தது. அஜ்ஜிமன் என்ற அமைப்பை நிறுவி சமூக ஒற்றுமைக்காக பாடுபட்டார். 1919 ஆம் ஆண்டு மகாத்மா காந்தியடிகளோடு இணைந்து ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபட்டார். சுதேசி இயக்கத்தில் ஈடுபட்டார். இதனால் காங்கிரஸ் பேரியக்கத்தின் முக்கிய தலைவர்களுள் ஒருவரானார். 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் முக்கிய பங்காற்றினார். இரண்டு முறை காங்கிரஸ் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். பாகிஸ்தான் பிரிவினையை எதிர்த்தார். விடுதலைக்கு பின் அரசியல் நிர்ணய சபையில் அங்கம் வகித்தார். பிரதமர் நேருவின் நெருங்கிய தோழரானார். இரண்டு முறை நாடாளுமன்ற அங்கத்தினராக தேர்ந்தெடுக்கப்பட்டு இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர் ஆனார். கல்வி கொள்கையில் பல சீர்திருத்தங்களை மேற்கொண்டார். பல நூல்கள் எழுதினார். இந்திய திருநாட்டின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். இவர் 1958 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11 ஆம்நாள் இயற்கை எய்தினார்.

1988 ஆம் ஆண்டு இவரது புகைப்படம் கொண்ட தபால்தலை வெளியிடப்பட்டது. 1992 ஆம் ஆண்டு இந்திய அரசு இவருக்கு இந்தியாவின் உயரிய விருதான பாரத ரத்னா விருதை வழங்கி கௌரவித்தது. இவரது வாழ்க்கை வரலாறு மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக திகழ்கிறது.

## கிராமப்புற கல்வி வளர்ச்சியில் இணைய அழைப்பு

புதிய தலைமுறை அறக்கட்டளை கிராமப்புற ஏழை மாணவர்களின் நலன் கருதி அவர்களின் கல்வி வளர்ச்சிக்காக கிராமப்புற இலவச கல்வி மையங்களை கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாக நடத்தி வருகிறது. 2020-21ஆம் கல்வி ஆண்டில் கொரோனா பாதிப்பால் கல்வி மையங்கள் திறக்கப்படாத சூழ்நிலையிலும், மாதம் ஒரு முறை மாணவர்கள் முககவசம் அணிந்து கொண்டு தனிமனித இடைவெளிவிட்டு மையத்திற்கு வந்து சுதந்திர தினம், ஆசிரியர் தினம், காந்தி ஜெயந்தி போன்ற நிகழ்ச்சிகளை நடத்தினர்.

**தேவைப்படும் பொருட்கள்:**

- பேனா & பென்சில்
- நோட்டு & புத்தகங்கள்
- ஜாமெட்ரி பாக்ஸ்
- காலணிகள்
- பிளாக் போர்டு
- அகராதி & வரைபடம்
- கால்குலேட்டர்
- மொபைல் போன்

மாணவர்களின் நலனில் விசேஷ அக்கறை உள்ள தொண்டு உள்ளம் கொண்ட ஆசிரியர்கள் / ஆசிரியைகளை தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த கல்வி மையங்களுக்கு ஆசிரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள். எந்த கட்டணமும் பெறாமல் இலவசமாக நடத்தப்படும் இந்த வகுப்புகளில் விவசாயிகள், கூலி தொழிலாளர்கள் ஆகியோரின் பிள்ளைகள்/ குழந்தைகளுக்கு சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. கற்றலில் பின் தங்கியுள்ள மாணவர்களிடம் கலந்து பேசி அவர்களுக்கு கற்றலில் உள்ள குறைபாடுகள், அவர்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகள் ஆகியவை கண்டறிந்து களையப்படுகின்றன. வார இறுதியில் தேர்வுகள் நடத்தப்பட்டு ஒவ்வொரு மாணவரின் வளர்ச்சியும் கணக்கிடப்படுகிறது.

இந்த கல்வி மையங்களுக்கு நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன. தொழிலதிபர்கள், தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனங்கள் ஆகியோர் நன்கொடை வழங்க வேண்டுகிறோம். தொடர்புக்கு **8754417308** என்ற எண்ணில் அழைக்கவும்.



செட்டிப்பேடு, காஞ்சிபுரம்



குத்தம்பாக்கம், திருவள்ளூர்

# பொதட்டூர்பேட்டில் இணையும் நல்ல உள்ளங்கள்



பொதட்டூர்பேட், திருவள்ளூர்

திருவள்ளூர் மாவட்டம் பொதட்டூர்பேட்டையில் புதிய தலைமுறை அறக்கட்டளையின் சார்பில் இயங்கி வரும் கிராமப்புற இலவச கல்வி மையம் கடந்த 5 ஆண்டுகளாக அப்பகுதியில் உள்ள கிராமப்புற ஏழை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக சிறப்பாக பணியாற்றி வருகிறது.

இந்த மையத்தின் வளர்ச்சிக்காக சென்னை கே.கே.நகரைச் சேர்ந்த 12 ஆம் வகுப்பு மற்றும் 5 ஆம் வகுப்பு மாணவியர்களான அபிராமி, அனந்தினி ஆகியோர் தங்களது சேமிப்பான ரூபாய். 12,000/-ல் அரிசி மூட்டைகள் வாங்கி கல்வி மையத்தின் ஆசிரியைகளின் குடும்பத்திற்கும் மற்றும் அந்த பகுதியில் குடியிருக்கும் 15க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வழங்கி உள்ளார்கள். இந்த இரண்டு பள்ளி மாணவிகளின் உதவும் உள்ளம் அனைவரின் பாராட்டுதலை பெற்றது.

பொதட்டூர்பேட்டை கல்வி மையத்தை சிறப்பாக நடத்தி வருபவர் திருமதி. ரமணி அவர்கள். மாற்றுதிறனாளியான இவர் மிகுந்த தன்னம்பிக்கையுடன் ஆற்றிவரும் சமூக பணி அப்பகுதி மக்களின் பாராட்டுதலை பெற்றுள்ளது. சமீபகாலமாக இவரை போன்ற தன்னலமற்ற சமூகபணியாற்றிவரும் பலரை மாநில அரசும், மத்திய அரசும் இனம் கண்டு அவர்களுக்கு விருதும் ஊக்க தொகையும் வழங்கி கௌவரவித்து வருகிறது. அதைப்போலவே ரமணி அவர்களுக்கும் விருதும் ஊக்கத்தொகையும் வழங்கி மத்திய மாநில அரசுகள் பெருமை படுத்த வேண்டும். அதற்கு அவர் முற்றிலும் தகுதி உடையவரே.



நன்கொடை அளித்த நல் உள்ளங்கள்

அடிப்படை கட்டமைப்பு, மக்கள் ஆதரவு, அடிப்படை பொருளாதாரம் என அனைத்திலும் பின் தங்கியுள்ள கிராமப்புறங்களில் சமூக பணி மேற்கொள்வது அவ்வளவு எளிதன்று. நெஞ்சுரமும், அனைத்து தரப்பினரிடமும் இனிமையாக பழகும் பாங்கும் பொறுமையும் கொண்ட திருமதி.ரமணி அவர்களின் நன்முயற்சிகள் மேலும் வளர்ந்து ஓங்க புதிய தலைமுறை அறக்கட்டளை அவரை நன்றியுடன் நெஞ்சாரப் பாராட்டுகிறது.

# “வள்ளி” ஆரோக்கியம் குறித்த செய்தி மடல் வெளியீட்டு விழா



வள்ளி செய்தி மடல் வெளியீட்டு விழா

**“வள்ளி”**
**உங்களுடைய சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் குறித்த சமுதாய மருத்துவ செய்தி மடல்**

புதிய தலைமுறை அறக்கட்டளையின் வள்ளியம்மை அம்மாள் கிராமப்புற மருத்துவ உதவித் திட்டத்தின் மூலம் புதிய சிந்தனையாக **“வள்ளி” சுகாதாரம் மற்றும் ஆரோக்கியம் குறித்த சமுதாய மருத்துவ செய்தி மடல்** வெளியீட்டு விழா டிசம்பர் 9, 2020 அன்று எஸ்.ஆர்.எம். மருத்துவமனையில் நடந்தது. விழாவில் புதிய தலைமுறை அறக்கட்டளையின் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.ஆர். ரமேஷ் கண்ணன் துவக்க உரை ஆற்றினார். புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயலாளர், து.வே. வெங்கடகிரி முன்னிலை வகித்து உரை ஆற்றினார். “வள்ளி” சமுதாய மருத்துவ செய்தி மடலை டாக்டர் அ. ரவிக்குமார், சார்பு துணை வேந்தர் எஸ்.ஆர்.எம். மருத்துவ மற்றும் சுகாதார அறிவியல் துறை எஸ்.ஆர்.எம். தொழில்நுட்பக் கல்லூரி, டாக்டர் அ. சுந்தரம், டீன் (மெடிக்கல்) எஸ்.ஆர்.எம். மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும் டாக்டர் கே. தங்கராஜ், மருத்துவ கண்காணிப்பாளர், எஸ்.ஆர்.எம். மருத்துவ கல்லூரி ஆகியோர் வெளியிட, டாக்டர் எம். லோகராஜ், துறைத் தலைவர் (எஸ்.ஆர்.எம். கம்யூனிட்டி மெடிசன்), விஷ்ணுப்ரியா, ஜெனரல் மேனேஜர் - எச்.ஆர் (எஸ்.ஆர்.எம். மருத்துவ கல்லூரி மற்றும் சுகாதார மையம்) ஆகியோர் பெற்றுக் கொண்டனர். மோ. தினகரன், துணை பொது மேலாளர், எஸ்.ஆர்.எம். மருத்துவமனை நன்றியுரை ஆற்றினார். புதிய தலைமுறை அறக்கட்டளையின் மூத்த திட்ட மேலாளர் எஸ். இளமாறன் மற்றும் திட்ட மேலாளர் கே. விஜயகோபால் உடனிருந்தனர்.

# பெண்கள் முன்னேற்றம் - வள்ளியம்மை அம்மாள் தையற் பள்ளி, வளசரவாக்கம், சென்னை



தையல் பயிற்சியில் ஈடுபடும் பெண்கள்

சென்னை, வளசரவாக்கத்தில் புதிய தலைமுறை அறக்கட்டளை நடத்தி வரும் திருமதி. வள்ளியம்மை அம்மாள் தையற் பள்ளி மூலம் பெண்களுக்கு தையல் கலையில் பயிற்சி அளித்து சுய தொழிலுக்கு துணை புரிந்து வருகிறது.

தையல் கலையில் தேர்ச்சி பெற்ற முன் அனுபவம் கொண்டவர்களை பயிற்சியாளர்களாக நியமித்து கடந்த 4 ஆண்டுகளாக 100க்கும் அதிகமான பெண்கள் சுய தொழில் செய்ய வழி காட்டியுள்ளது. இந்த திட்டத்தின் கீழ் வரும் டிசம்பர் 2020 மாதம் 4 ஆம் தேதி முதல் புதிய பயிற்சி வகுப்பு தொடங்க உள்ளது. 3 மாதங்கள் கொண்ட இந்த பயிற்சி வகுப்பில் சுடிதார், நைட்டி, கவுன், ப்ளவுஸ் போன்ற பெண்களுக்கு அதிகம் தேவையுள்ள தினசரி உடைகள் தைப்பதற்கு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. தற்பொழுது தினசரி ஆடைகளுக்கு தேவை அதிகம் உள்ளதால் பல பெண்கள் வீட்டில் இருந்தபடியே ஆடைகளை தயார் செய்து பல கடைகளுக்கு சப்ளை செய்து வருகிறார்கள். எனவே இந்த பயிற்சி பள்ளியில் சேருவோரின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வருகிறது. இவர்களின் தேவையை கவனத்தில் கொண்டு இந்த தையல் பயிற்சி பள்ளியை மேலும் பல ஊர்களில் விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளது. தையல் இயந்திரத்தை இயக்கும் விதம் மற்றும் எந்த விதமான உடைகளுக்கு எந்த தையல் அழுத்தம் (Pressure) இருக்க வேண்டும் போன்ற நுணுக்கங்களும் இதில் கற்பிக்கப்படுகின்றன. இதில் சேர விரும்புவோர் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்வது முக்கியம். இதற்கு குறைந்த பட்ச கல்வி தகுதி, வயது வரம்பு கிடையாது. கற்கும் ஆர்வம் மட்டும் போதுமானது. சேர விரும்புவோர் கீழ்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளவும் **8754417308.**



தையல் பயிற்சியை மேற்பார்வையிடும் பயிற்சியாளர் ராஜாத்தி

"ஊக்கமது கைவிடேல்"

புதிய தலைமுறை அறக்கட்டளை

# இணையவழி கருத்தரங்கங்கள்

## சுயதொழில் செய்யலாம் வாங்க !


பயிற்சியாளர் எஸ். சிவராமன்

புதிய தலைமுறை அறக்கட்டளையின் ஓர் அங்கமான (ISRB Expo) இந்திய சிறு மற்றும் கிராமப்புற தொழில்களுக்கான மையம் மூலம் டிசம்பர் 2-4 ஆம் தேதி ஆகிய மூன்று நாட்கள் (6 மணி நேரம்) **தொழில்முனைவோர்களுக்கான அரசின் கடன் மற்றும் மானியத்திட்டங்கள்** என்ற தலைப்பில் இணைய வழி கருத்தரங்கத்தினை நடத்தியது. இக்கருத்தரங்கில் மூன்று நாட்களும் தொடக்கத்தில் நமது ISRB Expo உறுப்பினர்களான பி. சவுந்தரராஜன் (சுருள் பாசி வளர்ப்பு தொழில், கோவை) ந. பாவேந்தன் (பாக்கு மட்டை தட்டு உற்பத்தி தொழில், சென்னை) மற்றும் டி.ராஜா (வாழை நார் மதிப்புக் கூட்டுப்பொருட்கள், மதுரை) சிறுதொழில் முனைவோர்கள் சிறப்புரையாற்றினர்.

பயிற்சியாளர் மற்றும் வல்லுனர் சிவராமன், அவர்கள், "மத்திய மற்றும் மாநில அரசுகளின் மேன்மையான கடன் திட்டங்கள், அதற்கான மானியங்கள்" குறித்தும் தொழில் வகைப்பாடுகள் (உற்பத்தி, வியாபாரம், சேவை தொழில், பண்ணைத்தொழில் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் கடன் திட்டங்கள் (புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் NEEDS Scheme, வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் UYEGP, பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் PMEGP, Mudra Loan Scheme, Standup India Scheme, தகுதிகள், சிறப்பம்சங்கள், கடன் திட்டத்திற்கு விண்ணப்பிக்கும் வழிமுறைகள் மற்றும் கடன் தொகை பெறும் வழிமுறைகள், கடன் தொகையினை திரும்ப செலுத்தும் வழிமுறைகள் மற்றும் அதற்கான இணையதளம் MSME குறித்த பல்வேறு தகவல்களை விரிவாக எடுத்துரைத்தார்.

இக்கருத்தரங்கில் தொழில் முனைவோர்கள் எந்த தொழிலை தேர்ந்தெடுத்து தங்களை தயார் செய்துகொண்டு விண்ணப்பித்து, கடன் வாங்குவதற்கு தேவையான ஆவணங்கள், பயனாளிகள் பங்களிப்பு, இவற்றின் முழு பயன்பாடுளை பெற்று, வெற்றிகரமான தங்கள் கனவுகளை நிறைவு செய்தும் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் உதவி செய்யலாம்'' என்பதை மிகவும், விரிவாகவும், அனைவரும் புரிந்துகொள்ளும் விதத்தில், பிரத்யேகமாக தயாரித்து புள்ளி விவரங்களுடன், செயல்முறை விளக்கத்தோடு நடத்தினார். இக்கருத்தரங்கில் தமிழகத்தின் (திருச்சி, இராமநாதபுரம், சென்னை, திருப்பூர், மதுரை, திண்டுக்கல், கரூர், தஞ்சாவூர், ஈரோடு, கன்னியாகுமரி, திருவாரூர், விழுப்புரம், நாகப்பட்டினம்) போன்ற பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 93க்கும் மேற்பட்ட சிறுதொழில் முனைவோர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

### பயனாளியின் கருத்துக்கள்


திருமதி. அமிர்தவள்ளி
தஞ்சாவூர்

**இக்கருத்தரங்கின் மூலம் அரசின் பல்வேறு கடன் திட்டங்கள் மற்றும் அதன் வழிமுறைகள் குறித்தும் விரிவாக தெரிந்து கொண்டேன். பயிற்சியாளர் சிவராமன் அவர்கள் மதிப்புமிக்க தகவல்களையும் மற்றும் பலரும் அறியாத கடன் திட்டங்களைப் பற்றியும் விரிவாக எடுத்துரைத்தது எனக்குள் ஒரு உத்வேகத்தை ஏற்படுத்தியது. விரைவில் நானும் ஒரு தொழில் முனைவோர் ஆவேன் என்ற தன்னம்பிக்கையை ஏற்படுத்திய புதிய தலைமுறை அறக்கட்டளையின் பணி சிறக்க என்னுடைய வாழ்த்துக்கள்.**

## அரசுத்துறை வேலை வாய்ப்புகள் !


பயிற்சியாளர் க. மாரிமுத்து

புதிய தலைமுறை அறக்கட்டளை சார்பில் "**பட்டதாரி இளைஞர்களுக்கான மாநில/மத்திய அரசு வேலைவாய்ப்புகள் (இரயில்வே துறை, தபால் துறை, மின்சாரத்துறை)** குறித்து" 2020, டிசம்பர் 15ஆம் தேதி முதல் 17 வரை 3 நாட்கள் - 6 மணிநேரம் இணையவழி (ஆன்லைன்) கருத்தரங்கம் நடைபெற்றது. பயிற்சியாளர் ஸ்ரீவில்லிபுத்தூர் க. மாரிமுத்து அவர்கள் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் வழங்கினார்.


முதல்நாள் 15.12.2020 அன்று தமிழக அரசின் மின்சாரத்துறை சார்ந்த வேலை வாய்ப்புகள் Junior Engineer Officer, Accounts Officer, Internal Audit Officers & Subordinate Officers போன்ற பதவிகளுக்கு தேவையான தகுதிகள், வயது வரம்பு, பாடத்திட்டம் அதற்கு தயாராகும் வழிமுறைகள் போன்ற பல்வேறு பயனுள்ள தகவல்களை தெளிவாக எடுத்துரைத்தார். பின்னர் அவரிடம் பயிற்சி பெற்று இன்று இராமநாதபுரம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலை வாய்ப்பு அதிகாரியாக பணிபுரியும் வீரமணி அவர்கள் மாரிமுத்து அவரிடம் பயின்று எப்படி அரசு வேலையில் சேர்ந்த தன்னுடைய அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.

இரண்டாவது நாள் 16.12.2020 அன்று இரயில்வேதுறை வேலை வாய்ப்புகள் பதவிகள், கல்வி தகுதிகள் மற்றும் பாடத்திட்டங்கள் அதற்கு தயாராகும் வழிமுறைகள் குறித்து பல்வேறு தகவல்களை தெளிவாக எடுத்துரைத்தார். விருதுநகர் மாவட்டம் செவல்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வரும் இராமமூர்த்தி அவர்கள் தன்னுடைய அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.

மூன்றாவது நாள் 17.12.2020 அன்று தபால் துறை வேலைவாய்ப்புகள், டி.என்.பி.எஸ்.சி மற்றும் மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் பணியறிவிப்பிற்கான போட்டித்தேர்வுகளின் அறிவிக்கையினை அதன் இணையதளமான www.upsc.gov.in அல்லது www.upsconline.nic.in என்ற முகவரியிலும், அரசு சார்ந்த நிறுவனங்களின் வேலைவாய்ப்பு அறிவிப்புகளை வெளியிடும் "எம்பிளாயிமெண்ட் நியூஸ்" (Employment News) என்ற வார இதழ் குறித்தும் பல்வேறு தகவல்களை தொகுத்து வழங்கினார். பயிற்சியாளரின் மாணவி தேவி அவர்கள் தான் அரசுத்தேர்வுக்கு தயாராகும் விதம் பற்றியும் கலந்து கொண்டவர்களுக்கு பலனுள்ள தகவல்களை வழங்கினார். இக்கருத்தரங்கில் 75க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

### க. மாரிமுத்து அவர்களிடம் பயிற்சி பெற்று வெற்றி பெற்றவர்கள்


வீரமணி


இராமமூர்த்தி

இராமநாதபுரம் மாவட்டம் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலை வாய்ப்பு அலுவலராக பணிபுரிந்து வரும் வீரமணி அவர்கள் மாரிமுத்து ஐயா அவர்களிடம் பயிற்சி பெற்று அரசுத் தேர்வு எழுதி வெற்றிபெற்று அரசுத்துறையில் வேலைக்கு சேர்ந்தது குறிந்து தன்னுடைய அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

அதேபோல் விருதுநகர் மாவட்டம் செவல்பட்டி கிராம அலுவலகத்தில் கிராம நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வரும் இராமமூர்த்தி அவர்களும் தன்னுடைய அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்.

**ISRB Expoவில் இன்றே உங்களை உறுப்பினராக இணைத்துக்கொள்ளுங்கள்**

**மேலும் விவரங்களுக்கு https://isrbexpo.org/membership-benefits/**

Our Sponsors
SRM Technologies
Green Pearl EDUCATION
SRM ENGINEERING CONSTRUCTION CORPORATION LTD.
CUB CITY UNION BANK LTD
NABARD NATIONAL BANK FOR AGRICULTURE AND RURAL DEVELOPMENT
TMB Tamilnad Mercantile Bank Ltd Be a step ahead in life

புதிய தலைமுறை அறக்கட்டளை
எண்: 24, ஜி.என்.செட்டி சாலை, தி.நகர். சென்னை - 600 017 | அலைபேசி: 8754417308, 8754417338, 8754417500
வலை:www.ptfindia.org. www.isrbexpo.org | மின்னஞ்சல்: contact@ptfindia.org

அச்சிட்டு வெளியிடுபவர் : து.வே.வெங்கடகிரி, செயலாளர், புதிய தலைமுறை அறக்கட்டளை